**தேதி:-07-12-2019 அ.வ.எண்.148/2010 வா.சா.1 (சாந்தி)**

**குறுக்கு விசாரணை :- (23, 24 பிரதிவாதிகள் தரப்பில்)**

என் தகப்பனார் இறந்த பிறகும் இதுவரையில் தாவாச் சொத்துக்கள் குறித்து பாகம் செய்து கொள்ளவில்லை. 09.04.2012 ல் 23 ஆம் பிரதிவாதிக்கு தாவா 2 ஆம்லக்கச் சொத்தில் பிரிக்கப்படாத 8.83 செண்ட் குறித்து நானும், 5 ஆம் வாதியும் ஒரு கிரையம் எழுதிக் கொடுத்தோம் என்றால் சரிதான். 1,3, 4 வாதிகளும் அதே தேதியில் 23 ஆம் பிரதிவாதிக்கு அதே சொத்து குறித்து பிரிக்கப்படாத 8.83 செண்ட் குறித்து ஒரு கிரையப்பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் சரிதான். 20.06.2013 ல் 24 ஆம் பிரதிவாதிக்கு தாவா 1 ஆம்லக்கச் சொத்தில் பிரிக்கப்படாத 6.66 செண்ட் குறித்து 2, 8, 16 மற்றும் 17 பிரதிவாதிகள் ஒரு கிரையம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதனால் 23, 24 பிரதிவாதிகள் தங்கள் பங்கு குறித்து பாகம் கேட்டு எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். எங்களுக்கு வரும் பாகத்தில் 23, 24 பிரதிவாதிகளுக்கு உரிய சொத்தினை அவர்களுக்கு வழங்குவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.